# மக்களுக்காக குரல் கொடுக்கும் தலைவர்களை இழிவுபடுத்துவதா?

இந்திய அரசியலில் சமீபகாலமாக சனாதனம் ஒரு பேசும் பொருளாகி வருகிறது.

இந்திய நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் (DMK) என்பது அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் தன் இளைஞர் படையிலிருந்த கலைஞர், நெடுஞ்செழியன், ஏ.வி.பி. ஆசைத்தம்பி, மதியழகன், ஈவிகே சம்பத் போன்ற இளைஞர்களுடன், அப்போது இந்தியாவில் இருந்த ஆதிக்கக் கட்சிகளை எதிர்த்து, நாட்டுப் பொதுமக்களின் சமூதாய உரிமைகளுக்காகப் போராடிய இயக்கமாகும். அந்த வழியில் இன்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சமத்துவம், சுயமரியாதை, மாநில உரிமைகள் போன்றவை குறித்துத் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றனர்.

சமீபத்தில், திருப்பதி கோவில் லட்டில் மாட்டுக் கொழுப்பு கலக்கப்பட்டுள்ளது என்று ஒரு சர்ச்சை எழுந்தது. கலப்படம் உண்மையாக இருந்தால், அதில் சம்பந்தப்பட்டவர்களும், அந்த நிறுவனத்தின் தவறான செயலும் கட்டாயமாக சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டும்.

### பவன் கல்யாணின் பச்சோந்தி அரசியல்

இதை முதலில் தெலுங்கு தேசம் கட்சி தலைவர் சந்திரபாபு நாயுடு, முன்னாள் முதல்வர் ஜெகன் மோகன் மீது குற்றம் சாட்டினார். சம்பந்தப்பட்டவர்களின் நிறுவனங்களே லட்டு விற்பனைக்கு நெய் சப்ளை செய்கின்றன என்று அவர், குற்றம் சாட்டினார். அதைத் தொடர்ந்து, நாயுடு வைத்துள்ள புள்ளியில் பவன் கல்யாண் கோலம் போட ஆரம்பித்துவிட்டார். நீங்கள் தெய்வீகமாக வழிபடும் இடத்தில், கடவுளின் பிரசாதத்தில் கலப்படம்" என்று பேசும் போது பவன் கல்யாண் சனாதனத்தையும் பற்றி மேடையில் பேசி வருவது வேடிக்கையாக உள்ளது.

**- அருண் ஆசைத்தம்பி பாண்டியன்**

பவன் கல்யாண் ஒரு கூட்டத்தில் மேடையில் பேசும் போது அந்த பிரசாதத்தின் கலப்படம் பற்றியும், பொதுமக்களுக்கும், பக்தர்களுக்கும் ஆறுதல் கூறும் வகையில், அதை தயாரிக்கும் நிறுவனத்தைக் கண்டித்தும், தேவஸ்தான நிர்வாகத்தை எச்சரித்தும் பேசாமல், அந்த கலப்படம் கொண்ட பிரசாதத்தை உட்கொண்ட பக்தர்களை சமாதானம் செய்யும் பதிலாக, சனாதனம் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார். "நான் ஒரு சனாதனி" என்று திரும்பத் திரும்ப அவர் கூறுவதைக் கேட்டால், அவருக்கே அவரின் நிலைப்பாட்டில் சந்தேகம் இருப்பதாகத் தோன்றுகிறது. அவர் மாநிலத்தில் உள்ள கோவில் பிரசாதத்தில் கலப்படம் இருப்பதை கவனிக்காமல், அப்பிரசாதத்தை உட்கொண்ட மக்களிடம் தான் கோபம் காட்டுகிறார்.

ஆனால், திருப்பதி தேவஸ்தான நிர்வாகம் தங்கள் பக்தர்களுக்கு மிகப் பெரிய துரோகம் செய்கிறது. கடவுளின் பெயரால், கோவில் நிர்வாகம் மக்களை ஏமாற்றி வருகிறது. நியாயமாக பார்த்தால் தரம் இல்லாத கலப்படம் கொண்ட பிரசாதத்தை மக்களுக்கு வழங்கியதற்காக, பொதுமக்கள் தான் திருப்பதி தேவஸ்தானத்தின் மீதும், அந்த அரசின் மீதும் கோபம் கொள்ள வேண்டும், வழக்குத் தொடுக்க வேண்டும்.

நீங்கள் நாட்டுமக்களிடம் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டிய இடத்தில் இருந்து கொண்டு, மன்னிப்பு கேட்பதை விட்டுவிட்டு, பாதிக்கப்பட்ட பக்தர்களை மன்னிப்பு கேட்கச் சொல்லி மிரட்டுவதும், மக்களுக்காக குரல் கொடுக்கக் கூடிய தலைவர்களை இழிவுபடுத்தி பேசுகிறீர்கள். இதில் தேவையற்ற விஷயங்களை பேசி, உங்கள் நிர்வாகத்தில் உள்ள குறைகளையும் ஊழலையும் மறைக்கச் சனாதனத்தை அரசியலாக்கி, மதச் சாயம் பூசி, மக்களிடையே வெறுப்பு உணர்வை தூண்டும் வகையில் பேசுவதாகவே புரிந்துகொள்ள முடிகிறது.

திருப்பதி தேவஸ்தான நிர்வாகத்தில் பெரும்பாலும் ஆரியர்களும் பிராமணர்களும் தான் நிர்வகிக்கிறார்கள். அவர்கள் உண்மையில் உங்களது சனாதன தர்மத்தைப் பின்பற்றியிருந்தால், எப்படி பெருமாள் பக்தர்களுக்கு துரோகம் செய்திருப்பார்கள்? இது இந்தியாவில் உள்ள அனைத்து ஹிந்து மக்களுக்கும் செய்த துரோகம் ஆகும்.

ஹிந்துக்களில் உள்ள அனைத்து சமயத்தனருக்கும் மட்டுமல்லாமல், இந்தியாவில் உள்ள அனைத்து மதத்திற்கும் சம உரிமையும், சமநீதிக்காகவும் போராடும் எங்கள் திராவிடத் தலைவர்களைப் பற்றி பேச உங்களை போன்ற பச்சோந்தி தனமான அரசியல் வாதிகளுக்கு எந்த அருகதையும் கிடையாது. "ஏன் பச்சோந்தி?" என்று சொன்னால் உங்களுக்கு புரியும்.

நீங்கள் எப்போது பாஜகவின் கை கூலியாகினீர்கள் என்று சற்று யோசிக்க வேண்டும். எப்போது நீங்கள் காவிக்குச் சென்றீர்கள்? 'சந்திரமுகி' திரைப்படத்தில் வரும் வசனம் போல், "முழுசா சந்திரமுகியா மாறியிருக்கிற கங்காவை பாரு" என்று சொல்வது போல, ஆந்திர அரசியலில் "முழுசா பாஜக வண்ணமாய் மாறிய பவனைப் பாருங்கள்" என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

2024 ஆந்திர தேர்தலில், பவன் கல்யாணின் ஜனசேனா கட்சி ஒரு அளவுக்கு வாக்குகள் பெற்றுள்ளது. ஆட்சியை பிடித்த தெலுங்கு தேசம் கட்சி பாஜகவின் பரிந்துரையால் பவனுக்கு துணை முதலமைச்சர் பதவியும் கிடைத்தது. அவர் அரசியல் பயணத்தை திரும்பிப் பார்த்தால், அவரை ஏன் "பச்சோந்தி" என்று கூறினேன் என்று புரியும்.

அவர் முதலில் கட்சி ஆரம்பித்தபோது, மக்கள் உரிமை, சமத்துவம், சுயமரியாதை, மக்களுக்கான சக்தி என்று தான் கூறினார். பெரியாரின் கொள்கைகள் இந்தியாவில் உள்ள அனைத்து மக்களுக்கும் பொருந்தும். நாட்டில் உள்ள அனைவரும் முற்போக்கு சிந்தனையுடன், சுயமரியாதையோடு வாழவேண்டும் என்று சொல்லி வந்தவர் பெரியார்.

தமிழகத்தில் பெரியாரின் பெயரைச் சொல்லி நடிகர் எம்.ஜி.ஆர் மக்களை ஏமாற்றி ஆட்சியில் அமர்ந்தார். அதுபோல, நடிகர் பவன் கல்யாண் ஆந்திராவில் பெரியாரின் பெயரையும், அவரது கொள்கையையும் சொல்லி மக்களை ஏமாற்றி வந்தார். மக்களிடம் பெரியாரும் அம்பேத்கரும் வழியில் தான் அரசியல் பயணத்தைத் தொடர்கிறேன் என்று கூறி, சமூகநீதி, சமத்துவம், சுயமரியாதை போன்ற கொள்கைகளுக்கு முரண்படுபவர்களுடன், பாஜகவுடன் பணம், பதவிக்காக கைகோர்த்து, துணை முதலமைச்சர் ஆகி, தனது மரியாதையை இழந்து, காவி மயமாய் நிற்கிறார். இவர் புலித் தோல் போர்த்திய பசு அல்ல, பசுத் தோல் போர்த்திய நரி என்று ஆந்திர மக்கள் உணர வேண்டும்.

சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால், சனாதன தர்மம் என்பது ஹிந்துக்கள், அதிலும் முக்கியமாக பிராமணர்கள் எப்படி வாழ வேண்டும் என்று சொல்லும் கோட்பாடுகளும் வழிமுறைகளும் உள்ளன என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

மக்களின் முன் ஜென்ம பாவப் புண்ணியங்களை கணக்கில் வைத்து அவர்களின் வாழ்க்கை நடக்கிறது என்ற மூட நம்பிக்கைகளும் அதில் கூறப்படுகிறது.

மக்களுக்கு நல்ல வாழ்க்கை முறையை, நல்ல அறிவை, முற்போக்கு சிந்தனையைத் தூண்டும் வகையாக எந்தப் புத்தகமாக இருந்தாலும் அதைக் கற்பதில் எந்தத் தவறும் இல்லை.

ஹிந்துக்களின் சனாதன தர்மம் மட்டுமல்ல, கிறிஸ்தவர்களின் பைபிள் ஆகட்டும், அல்லது இஸ்லாமியர்களின் குரான் ஆகட்டும், இவை அனைத்தும் மனிதனின் நல்ல வாழ்க்கை முறையை தான் விளக்குகின்றன என்ற நம்பிக்கையுடன் தான் மக்கள் படிக்கின்றனர்.

சனாதனம் நல்ல வாழ்க்கை முறையையும், வழிமுறையையும் கூறவில்லை என்றால் அது சனாதன தர்மம் ஆகாது.




ஈரோடு மாவட்டம், பெரிய சடையம்பாளையம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள பகுதி நேர நியாயவிலைக் கடையினை கடமையினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து நியாயவிலை பொருட்களை வழங்கினார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாநகராட்சி ஆணையாளர் என்.மணீஷ், துணை மேயர் வி.செல்வராஜ், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ராஜ்குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### படித்த இளைஞர்களுக்கான – ஒளிமயமான வாழ்க்கைப் பாதையை

# உருவாக்கும் வழியை முதல்வர் உருவாக்கிக் கொடுத்துள்ளார்!

## 'தினகரன்' தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, அக்.11–

படித்த இளைஞர்கள் அனைவரும் தங்களுக்கான ஒளிமயமான வாழ்க்கைப் பாதையை எளிதில் உருவாக்கும் வழியை முதல்வர் உருவாக்கிக் கொடுத்துள்ளார் என தினகரன் நாளேடு 9.10.2024 தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.



தினகரன்

அக்டோபர் 9, 2024 புதன்கிழமை

ஒளிமயமான பாதை

முதல்வர் தலைமையில் முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு என்ற பெயரில் சென்னை கோயம்புத்தூர், தூத்துக்குடி ஆகிய நகரங்களில் நடத்தப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாடுகள் மூலம் ₹1,90,803 கோடிக்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு 2,80,600 பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக ஐக்கிய அரபு நாடுகள், சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு 17,371 பேருக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துகிற வகையில், ₹7,441 கோடி மதிப்பிலான முதலீடுகள் பெறப்பட்டன.

மூன்றாம் கட்டமாக, சென்னையில் நடத்திய

அத்தலையங்கம் வருமாறு : –

முதல்வர் தலைமையில் முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு என்ற பெயரில் சென்னை கோயம்புத்தூர், தூத்துக்குடி ஆகிய நகரங்களில் நடத்தப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாடுகள் மூலம் 1,90,803 கோடிக்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு 2,80,600 பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக ஐக்கிய அரபு நாடுகள், சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு 17,371 பேருக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துகிற வகையில், 7,441 கோடி மதிப்பிலான முதலீடுகள் பெறப்பட்டன.

மூன்றாம் கட்டமாக, சென்னையில் நடத்திய உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் 631 ஒப்பந் தங்கள் மூலம் 6,64,180 கோடி முதலீடுகளும், அவற்றின் மூலம் 14,54,712 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகளும், 12,35,945 பேருக்கு மறை முக வேலைவாய்ப்பும் என மொத்தம் 26,90,657 வேலை வாய்ப்புகளுக்கு உறுதி செய்யப்பட்டன. 4ம் கட்டமாக, ஸ்பெயின் நிறுவனங்களுடன் 3,440 கோடி அளவிற்கு தொழில் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

5ம் கட்டமாக, அமெரிக்காவில் உலகின் முன்னணி தொழில் நிறுவனங்களின் முதலீட் டாளர்களுடன் 19 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. அந்த ஒப்பந்தங்கள் மூலம் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு 11,516 புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

சென்னை, கோவை, ஓசூர் போன்ற நகரங்கள் மட்டுமே தொழிற்துறையில் முன்னேறி வந்த நிலையை மாற்றி தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், மதுரை, அரியலூர் என வளர்ச்சி பெற வேண்டிய மாவட்டங்களை முன்னிறுத்தி 19 தொழிற்சாலைகள் 17,616 கோடி முதலீட்டில் தொடங்கப்பட்டு மொத்தம் 64,968 இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்றனர்.

இந்நிலையில் நேற்று முதல்வர் தலைமையில் நடந்த அமைச்சரவை கூட்டத்தில் மேலும் ஒரு மணி மகுடமாக 38,600 கோடி முதலீட்டிற்கான 14 புதிய முதலீட்டு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித் துள்ளது. 5,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் ராணிப்பேட்டையில் டாடா மோட்டார்ஸ் நிறுவனம், பாக்ஸ்கான் குழுமத் தின் துணை நிறுவனமான யூசான் டெக்லானஜி (இந்தியா) பிரைவேட் லிமிடெட் 13,180 கோடி முதலீட்டில் 14,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையிலும், தூத்துக்குடி, விருதுந கர், திருநெல்வேலி, ராமநாதபுரம், திருவண் ணாமலை மாவட்டங்களில் பிஎஸ்ஜி குழுமத்தின் துணை நிறுவனமான லீப்கீரின் எனர்ஜி பிரைவேட் லிமிடெட் 10,375 கோடி முதலீட்டில் 300 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையிலும், அரிய லூர் மாவட்டத்தில் தைவான் நாட்டை சேர்ந்த டீன் ஷூஸ் குழுமத்தின் துணை நிறுவனமான ப்ரீடிரெண்ட் இன்டஸ்ட்ரியல் இந்தியா பிரைவேட் லிமிடெட் 1000 கோடி முதலீட்டில் 15,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையிலும், காஞ்சி புரம் மாவட்டத்தில் கேன்ஸ் சர்க்யூட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் 1,395 கோடி முதலீட்டில் 1,033 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகை யிலும், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் அசெண்ட் சர்க்யூட்ஸ் பிரைவேட் லிமிடெட் 612 கோடி முதலீட்டில் 1,200 பேருக்கு வேலைவாய்ப்பு என 14 புதிய முதலீடுகளுக்கான ஒப்புதல் அமைச்ச ரவை கூட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மொத்தம் 38,600 கோடி மதிப்பிலான திட்டம் மூலம் 46,931 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

படித்த இளைஞர்கள் அனைவரும் தங்களுக்கான ஒளிமயமான வாழ்க்கை பாதையை எளிதில் உருவாக்கிக் கொள்ளும் வழியை முதல்வர் உருவாக்கிக் கொடுத்துள்ளார் என்றால் அது மிகையல்ல.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.


எங்கள் முகவரிக்கு

6 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 24.05.1975

மறைவு 11.10.2018

சி.சி.கதிரவன் DHMCT., MTM

என்றும் நினைவில்...

அம்மா சி.சின்னம்மாள் சின்னச்சாமி Ex.MC

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர்

மனைவி, மகன்கள், மகள்கள், தம்பிகள், தங்கைகள்

மைத்துனர்கள், நண்பர்கள், உற்றார் - உறவினர்கள்

மற்றும்

நியூ கதிரவன் பேக்கரி - நியூ கதிரவன் ரிலாக்ஸ் கார்னர்

நியூ கதிரவன் பஸ் சர்வீஸ் - நியூ கதிரவன் விவசாய பண்ணை

ஊழியர்கள் - ஆரப்பாளையம், மதுரை

M.R.கிராபிக்ஸ் 99655 67373




மயிலாடுதுறை மாவட்டம் – தரங்கம்பாடி டேனிஷ் கோட் மை மற்றும் ஆளுநர் மாளிகையை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆய்வு மேற்கொண்டார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சுதா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.அப்துல் மாலிக், பி.எம்.அன்பழகன், மங்கை எம்.சங்கர், ஞான இமயநாதன், தொழில்நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், தரங்கம்பாடி பேரூர்ச் செயலாளர் முத்துராஜா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் உமா மகேஸ்வரி சங்கர், தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணா சங்கரிகுமரவேல் மற்றும் பலர் உள்ளனர்.